சுருளியாறு பகுதில் மின் வாரியத்திற்குச் சொந்தமான பொருடகள் களவு போவதைத் தடுக்கும் திட்டம்

*வினா எண். 123— திரு. ரா. கிருஷ்ணன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சுருளியாறு, லோயரில் மின் வாரியத்திற்குச் சொந்தமான இரும்பு, சிமெண்ட் தகடுகள் களவு போயிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) களவு போவதை தடுக்கும் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும் மிரட்டப்படுவதும் உண்மையா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி மின் வாரியத்திடம் தகவல் ஒன்றும் கிடைக்கப் பெறவில்லை.

(இ) களவு போவதுபற்றிக் காவல்துறைக்குப் புகார் கொடுக்கப்பட்டு பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

திரு ஆர். டி. கோபாலன்: எந்த ஆண்டிலிருந்து களவு போக ஆரம்பமானது ? இந்தக் களவு சம்பந்தமாக நான் அமைச்சருக்குப் புகார் கொடுத்து எழுதியிருந்தேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தப் பொருள்கள் களவு போயின. புகார்களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சில பேர் தண்டனைக்குள்ளாகியிருக்கிறார்கள். சில பேர் சாமர்த்தியமாக விடுவித்துக் கொண்டார்கள்.

மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் கலை அரங்கங்கள் கட்டும் திட்டம்

*வினா எண் 124— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி–அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் அரசே நாடகக் கலையரங்கங்கள் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாவட்டத்தின் தலைநகர் அல்லது முக்கிய இடத்தில் கலை அரங்கம் கட்டுவது பற்றிய கருத்துரு பரிசீலிக்கப்படுகிறது.

திரு.கு. பாலன்: சென்னை நகரில் தியேட்டர் கட்டுவது பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எத்தனை தியேட்டர்கள் இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அது மாநகராட்சி, நகராட்சிகளின் சார்பில் கட்டப்படுவது. அதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தக்

1981 ஆகஸ்ட் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கேள்வி மாவட்டத் தலைநகரங்களில் நாடகம் நடத்துவதற்குக் கலையரங்குகள் கட்டுவது பற்றிய கேள்வி. அதற்குப் பதிலளித்திருக்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: நாடகக் கலை கடந்த காலத்தைவிட தற்போது கொஞ்சம் கொஞ்சமாகத் தொய்வு அடைந்து வருவது அரசுக்கு நல்ல முறையில் தெரியும். அதைப் போக்குகின்ற முறையில் மாவட்டத் தலைநகரங்களிலும் பெருநகரங்களிலும் அரசு நாடகக் கலையரங்குகள் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எவ்வளவு காலத்தில் அவை முற்றுப்பெறும்? எவ்வளவு விரைவாக அந்தத் திட்டத்தை அரசு கொண்டு வர முடியுமோ அந்த அளவுக்குத் தீவிரமான முறையில் அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாடகங்களை நடத்துவதற்கு மாவட்டத் தலைநகரங்களில் அல்லது முக்கிய நகரங்களில் இதுபோன்ற நாடகக் கலையரங்குகள் வேண்டுமென்பதை, மிகவும் அவசியமான தேவை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த இடங்களில் அத்தகைய கலையரங்குகள் அமைக்கவேண்டுமென்பதற்கு அரசு கொள்கையளவில் முடிவும் எடுத்திருக்கிறது.
இப்போது முதல் முயற்சியாக நம்முடைய அரசின் சார்பிலே நடத்தப்படுகிற பொருட்காட்சிகளில் வருகிற வருவாயை வைத்து அந்த அந்தத் தலைநகரங்களிலே இப்படிப்பட்ட அரங்குகளைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே முதல் முறையாக கோவை நகரத்திலே 22 லட்ச ரூபாய் செலவிலே ஒரு கலையரங்கத்தைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்து இருக்கிறது. அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அதை தொடர்ந்து வேறு நகரங்களுக்கும் இப்படிப்பட்ட கொள்கை முடிவுகள் விஸ்தரிக்கப்படும்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாய்லாந்து நாட்டிலே ரோஸ் கார்டன் என்னும் இடத்திலே அந்த நாட்டினுடைய பழம்பெரும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்கியிருக்கிறார்கள். அதைப் போன்று தமிழ்நாட்டிலேயும் இங்கே உள்ள கிராமியக் கலை நிகழ்ச்சிகளை ஏதாவது ஒரு இடத்திலே நடத்திக் காட்டி அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இது மாவட்டத் தலைநகரங்களிலே கலையரங்குகள் கட்டுவது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது சுற்றுலாத் துறையைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் அது பற்றி அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முடிவுகளைப்பற்றி கொஞ்சம் விரிவாகவே பதில் சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நாடகக் கலையைப் பேணிப் பாதுகாக்க அரசுக்கு இருக்கிற அக்கறையைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். நாடகக் கலையிலே சிறந்தவர் மன்னார்குடியிலே பிறந்த எம். ஜி. நடராஜப் பிள்ளை.

அவர் பிறந்து வளர்ந்த மன்னார்குடியிலே கலையரங்கத்தைக் கட்டுவதற்கு அரசு பரிசீலனையில் அது இருக்கும் என்று நம்பு கிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நாடகக் கலைமீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனக்குத் தெரிந்த வரையில் அவரே கூட நடிகராக இருந்திருக்கிறார் என்று கருது கிறேன். ஆகவே அவருக்கு இருக்கிற ஆர்வம் அரசுக்கும் இருக் கிறது, காலஞ்சென்ற புகழ்மிக்க எம். ஜி. நடராஜப் பிள்ளை வாழ்ந்த மன்னார்குடியிலே இன்னும் அவரைப்போன்ற கலைஞர்கள் வ ழ்கின்ற, வாழ்ந்த மன்னார்குடியிலே அரங்கம் கட்டமுடியுமா என்பதைப்பற்றித் தலைநகரங்களிலே கட்டிவிட்டு அதற்குப் பிறகு அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாவட்டப் பெருநகரங்களிலே நாடகக் கலையரங்கங்கள் கட்டுகிற நிலையிலே சென்னை நகரிலே உள்ள கலைவாணர் அரங்கத்திலே சில நாடகங்கள் நடத்த வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே ஆர். எஸ். மனோகர் நாடகம் மாதிரியான நாடகங்களைப் போடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கம் பல்வேறு பணிகளுக்கு உரிய விதத்திலே அங்கே அந்த மேடை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை நடத்துவதிலே மேடை அமைப்பிலே கொஞ்சம் பாதகங்கள் இருக்கின்றன. ஆனால் மற்ற நாடகங்கள் அந்த மேடையிலே நடந்து வருகின்றன. இதைத்தவிர வேறு பல அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் எல்லாம் அந்த மேடையிலே நடத்துகிறபோது அந்த மேடை தோற் றத்தையே முழுவதும் அவ்வப்போது மாற்றியமைக்கக்கூடிய வகையிலே அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை மாத்திரம் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலையில் கலைவாணர் அரங்கத்தினுடைய மேடையை இப்போது மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக் கான சம்பள விகிதம்.

*வினா எண். 125—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தனியார் கம்பெனிகளில் கொடுக்கப்படும் சம்பள அளவு தமிழக அரசின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா?